<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 19/2024**

2025ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய மரகதம் **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.10.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | மரகதம் | | |
| Father /Husband Name | : | குருமூர்த்தி | Court | : |
| Village | : | பூவம், காரைக்கால் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 65/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 28.12.2019 | வாதியின் தகப்பனார் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 12.02.2024 | தாவா சொத்திற்கான வாதியின் பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 26.01.2024 | வாதி மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரின் அலுவலக நகல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 12.02.2024 | தாவா சொத்தை அளவீடு செய்ய மனுவின் ஒப்புகை சீட்டு **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 5. | -- | 01.02.2010 முதல் 21.02.2024 வரையிலான தாவா சொத்தின் வில்லங்க சான்றின் கணினி நகல் **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.